**இலங்கை தென் மேற்குப் பகுதியில் நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டம் (கட்டம் -01) - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

இலங்கை தென் மேற்குப் பகுதியில் நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டம் (கட்டம்-01) இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவருக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 யூன் 01 ஆந் திகதிய சீஎல்கே 1013 - 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு மற்றும் 2016 மார்ச் 16 ஆந் திகதிய சீஎல்கே 1013- 02 எல் ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கை மற்றும் நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது.

நீர்கொழும்பு மாநகர சபை பகுதியில் 73,000 மக்களிற்கான விரிவாக்கப்பட்ட கழிவுநீர் சேகரிப்பு சுத்திகரிப்பு முறைமை மற்றும் சுகாதார சேவைகளிற்கான நுழைவுகளை முன்னேற்றுதல், தண்ணீர் மற்றும் சுகாதார துறை கட்ட வேலைகளை தெளிவுபடுத்தல் தரமுயர்த்துதல், வறுமைக்கு எதிராக வடிவமைக்கப்பட்ட வறுமைக் குறைப்பின் கொள்கைகள் அபிவிருத்தி ஊடாக பாதிக்கப்பட்ட வீட்டுடமையாளர்களிற்கான சேவைக்கு நுழைவு வசதிகள் மற்றும் கடலமுக்கம் மற்றும் கடற்சுழற்சச்சி தந்திரோபாயம் மற்றும் அமுக்கம் மற்றும் உயிரணுவியல் பராமரிப்பு போன்றன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகவுள்ளன. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசனை, நீர்கொழும்பில் சுகாதாரம் மற்றும் முகாமைத்துவ உதவி ஆலோசனை எனப் பெயரிடப்பட்ட 03 கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 18,739.81 மில்லியனிற்கு சமமான யூரோ 107.70 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,224 மில்லியனிற்கு சமமான யூரோ 76 மில்லியன் பிரான்ஸ் டி அபிவிருத்தி முகவர் வங்கியால் நிதியளிப்பதற்கும் மிகுதி யூரோ 26 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கபட்டது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 அபிப்பிராயம்**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை/கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் ஒழுங்குபடுத்தல் குழுக்கூட்டம் 02 மாதங்களுக்கு ஒரு தடவை நடைபெறவேண்டிய போதிலும் 2017 இலிருந்து 2022 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது எந்தவொரு கூட்டங்களும் நடைபெற்றிருக்கவில்லை. | ஈஸ்ரர் ஞாயிறுத் தாக்குதல் மற்றும் கொவிட் - 19 பரம்பலால் ஒழுங்குபடுத்தல் குழுக்கூட்டம் நடைபெறாது பிற்போடப்பட்டிருந்தது. | ஒழுங்குபடுத்தல் குழுக் கூட்டம் நடாத்துவதற்கும் கொள்கைத் தீர்மானங்களை திட்டமிடப்பட்டவாறு நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீகச் செயன்முன்னேற்றம

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீகச் செயன்முன்னேற்றம்

| இல | செயற்திட்டக் கூறு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவப் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|---|
| (அ) | நீர்கொழும்பில் சுகாதாரம் | | | |
| i) | நீர்கொழும்பு கழிவுநீர் அகற்றல் முறைமைக்கான பம்ப் வீட்டுடன் சேகரித்தல் முறைமையின் நிர்மாணம். | இந்த நிர்மாணத்திற்கான விலைமனு 2022 சனவரி 25 இல் பெறுகைக் குழுவினால் அனுமதிக்கப்பட்டிருந்த போதும் விலைமனு அழைத்தலானது ஏஎப்டி நிதி வரையறையினால் நிறுத்தப்பட்டிருந்தது. | விலைமனு அழைத்தல் நடவடிக்கைகளானது பெறுகைக் குழுத் தீர்மானத்தின் பிரகாரம் நிதிகள் இல்லாமையால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை மேலதிக காலதாமதம் இல்லாமல் தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii) | நீர்கொழும்பு கழிவகற்றல் முறைமைக்கான கழிவுநீர் | 2022 மார்ச் 02 இல் விலை மனு ஆவணங்கள் விலைமனுதாரருக்கு விநியோகிக்கப்பட்டபோதும் | பெறுகைக்குழுத் தீர்மானத்தின் பிரகாரம் நிதியங்ள் இல்லாமையால் பெறுகை நடவடிக்கைகள் | செயற்திட்ட நடவடிக்கைகளை மேலதிக காலதாமதம் இல்லாமல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுத்திகரிப்புப் பொறி மற்றும் அகற்றல் முறைமை | நிதிகள் இல்லாமையால் விலைமனுச் செய்முறை இடைநிறுத்தப்பட்டிருந்தது. | இடைநிறுத்தப்பட்டிருந்தது. | தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **iii)** | ஒடுங்கிய பாதைகளிலுள்ள சேகரிப்பு முறைமையை நிர்மாணித்தல் மற்றும் நீர்கொழும்பு கழிவகற்றல் முறைமைக்கான சொத்து இணைத்தல். | சொத்து இணைத்தல் அளவை முடிவடைந்த போதும் நிதியங்கள் இல்லாமையால் பெறுகை நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | இலங்கையிலுள்ள பொருளாதாரம் ஸ்திரமற்றதன்மையில் இருப்பதால் மேலதிக கடன் மீளளிப்பினை ஏஎப்டி இடைநிறுத்தியது. | செயற்திட்ட நடவடிக்கைகளை மேலதிக காலதாமதம் இல்லாமல் தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | கழிவகற்றல் முகாமைத்துவத் திறன்கள் அபிவிருத்தி ஆலோசனை | பெறுகைச் செய்முறை 2018 நவம்பர் இல் தொடங்குவதற்கு பட்டியலிடப்பட்ட போதும் உபகரண ஒப்பந்தம் மாத்திரம் (பொதி 2) 2022 நவம்பர் இல் வழங்கப்பட்டதுடன் ஒப்பந்தமானது 2022 திசெம்பர் 31 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஒப்பந்தத்திற்கான விலைமனு ஆவணங்களை தயாரித்தலிற்காக பீஜஈசீ ஆலோசனையாளர் பொறுப்பாகவிருப்பதால் ஆரம்ப பெறுகை தாமதமானது எஸ்எம்எஸ்டிசீ தொடங்குவதில் தாமதத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாகவிருந்தது. தொழில்நுட்ப பூர்த்தியாக்கல் திகதியான 2023.12.21 இற்கு முன்னர் மானியத்தின் கீழான கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை பூர்த்திசெய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. | பெறுகைச் செய்முறையை துரிதமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | காணி சுவீகரிப்புக்கள் | செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியபோதும் கழிவுநீர் பம்பிங் நிலையங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறிக்கு தேவையான 12 நிலத்துண்டுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காணிகள் தனியார் தரப்பினருக்கு சொந்தமானதாகும். உரிமையாளரின் எதிர்ப்பு மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு போன்றவற்றால் சில தாமதம் ஏற்பட்டது. | காணி சுவீகரிப்பு செய்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவப் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|
| செயற்திட்ட அலுவலகம் 2016 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்த போதும் அண்ணளவாக 20 உத்தியோகத்தர்கள் செயற்திட்ட உத்தியோகத்தர்களாக வேலைசெய்துகொண்டு வருகின்ற போதிலும் ஆரம்ப வேலை ஒப்பந்தங்களின் 03 பாரிய வேலைகள் இதுவரை வழங்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் செயற்திட்டத்தின் எதனையும் இதுவரையிலும் பூர்த்திசெய்ய முடிந்திருக்கவில்லை. அதற்கிணங்க, பெரிய பதவியணி மற்றும் செயற்திட்ட அலுவலகத்தை பராமரிப்பதற்கு செலவழிக்கப்பட்ட பணம் சிக்கனமற்றதாகவிருந்தது. | கடன் உடன்படிக்கை 2016.06.01 இல் கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவானது(பீஎம்யூ) ஆரம்பத்தில் 10 உத்தியோகத்தர்களுடன் 2017 சனவரியில் (7 மாதங்கள் காலதாமதம்) தாபிக்கப்பட்டது. ஆலோசனைக்குரிய சமர்ப்பித்தலுடன் தொழில்நுட்ப உதவியுடான தேவைப்பாடுகளுக்கிணங்க அலுவலர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இது ஆரம்ப மற்றும் விரிவான வடிவமைப்பு நிலைமைகளுக்காக 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் முறையே 15 மற்றும் 17 வரைக்கும் அதிகரித்திருந்தது. | சிக்கனமற்ற செலவீனங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவப் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|
| கடப்பாட்டுக் கட்டணங்கள் தற்போது நாட்டின் பொருளாதாரச் சிக்கலால் தவிர்க்க முடியாத இருந்தபோதும் வழங்கல் இலக்குகளை அடைவதன் மூலம் இதனைக் குறைக்க முடியும். எனினும், இந்தச் செயற்திட்டம் தொடர்பில் 2011 இலிருந்து 2022 வரையும் மீள்வழங்காத கடன் தொடர்பில் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 190 மில்லியனை பொதுத்திறைசேரி செலுத்தியிருந்ததுடன் இவ்வகையான கொடுக்கல்வாங்கல்கள் நாட்டிற்கு பெரிய நிதிச்சுமையாக இருக்க முடியும். | செயற்திட்டத்தில் ஏற்பட்ட காலதாமதங்களால் வழங்கல்கள் தாமதமடைந்தது. | பொருளாதாரமற்ற செலவீனங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவப் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|
| கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இந்த ஆண்டளவில் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட வேண்டியபோதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் மீள்வழங்காத கடன் மற்றும் மானியம் முறையே 94 சதவீதம் மற்றும் 72 சதவீதமாகவிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் செயன்முன்னேற்றம் காட்டப்பட்டதுடன் செயற்திட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு முகாமைத்துவத்தால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அரசாங்கமானது கடன் செலுத்தத் தவறியதாக 2022 ஏப்ரல் இல் அறிவித்திருந்தது. அதற்கிணங்க, 2022 திசெம்பர் 20 அளவில் நீர்கொழும்பு வடிவமைப்புக்களை பூர்த்திசெய்வதற்கு டீஎஸ்சீ ஆலோசனை மற்றும் என்டபிள்யூஎஸ்டிபீ என்பவற்றிற்கிடையில் எம்ஓயூ ஒன்றிளை கைச்சாத்திட்டிருந்ததுடன் காலி/உனவட்டுனக்கான விலைமனு ஆவணத்திற்கான விரிவான வடிவமைப்பு மற்றும் தயார்படுத்தல் இடைநிறுத்தப்பட்டமை. | ஏதிர்கால மீள்வழங்கல்களை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |